1972 டிசம்பர் 15]

*Employment opportunities for physically disabled.*

* 198 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Union Government have directed the State Government to offer first priority to the disabled in the matter of recruitment to the State Services without any reference to the Employment Exchanges; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ்: உடல் ஊனமுற்றவர்களுக்கு நியமனங்களில் முன் உரிமை கொடுக்க அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழிற்சாலைகளில் எல்லாம் அப்படிப்பட்டவர்களுக்கு ஓரளவுக்காவது வேலைகள் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து வருகிறோம். கட்டாயப்படுத்த முடியாது.

சிறைச்சாலைகளில் தயாரிக்கப்பட்ட துணி

* 199 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971–72-ஆம் ஆண்டில் தமிழக மத்திய சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளால் மொத்தம் எவ்வளவு மீட்டர் துணி நெய்யப்பட்டது?

(இ) அவைகளின் மதிப்பீட்டுத்தொகை சிறைச்சாலைவாரியாக எவ்வளவு?

(உ) அவைகள் எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட்டன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சபை முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: மத்திய சிறைச்சாலைகளில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் தொகை என்ன? நெசவுத்

@ 417–418-ம் பக்கங்களில் இணைப்பு–3 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.